# ஞானதீபம்.

புத்தகம்—1 | 1893 ஷு ஆடி மீ 1௨ | இலக்கம்—12.

பாத்தினுடைய இல்மைக் கற்றுக் கொள்ள நாடுகிறவர்கள் கவனிக்கவேண்டியது. முதலாவது காமிலான செய்குமார்கள், காமிலான செய்குமார்களென்பதின் கருத்தாவது, ஆலம் அஜிசாம், ஆலம் மலக்கூத்தி ஆலம் ஜபறூத்து ஆலம் லாகூத்து, ஆகிய ஒவ்வொரு ஆலங்களையும் அவைகளுக்குரிய அமல்களைச் செய்து கடந்து இவைகளுக்கிடையேயுள்ள திரைகள் நீங்கப்பட்டு நிரப்பமடைந்தவர்கள். இப்படி நிரப்பம் பெருதவர்களுக்கு முரீதீன்களுக்கு சுகூதுகளிலுண்டாகக்கூடிய மருட்டுதல் தடைமுதலிய ஆபத்துகளை விட்டுங் காப்பாற்றுதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யக்கூடாது. அவர்கள் தாங்கள் உயர்ந்த பதவியைப்பெற்றுக் கொள்ளுதற்குப் பிரயாசப்படுகிற நேரத்தில் பிறருக்கு உபதேசஞ்சொல்லவும் அவர்களைத் திருத்தவும் வழிகாட்டவும் எங்கு இடமிருக்கிறது? சில மக்காம்களில் மனிதர்களோடு பேசுவதையும் உலக எண்ணங்களையும் கித்தாபுகளை வாசிப்பதையும் நீக்க வேண்டியதாய்வரும். இப்படிப்பட்ட மக்காம்களில் சூபியாக்கள் காடுவனங்களிலும் மனிதர் சஞ்சரிக்காத விடங்களிலும் சென்று தனித்தவர்களாய் உண்மைப் பொருளையேயன்றி மற்றயாவையும் மறக்கத் தென்டிப்பார்கள். இவ்விதமான மக்காம்களையெல்லாம் கடந்து நிரப்பம் பெற்றவர்களுக்குத்தான் காமிலென்று சொல்லப்படும், இவர்களல்லாதவர்களுக்கு நசீஹத்துக் கொடுக்கக்கூடாது. ஊருக்கூர் திரிந்து நசீஹத்தை விற்றுத்திரியும் மனிதர்களால் வெகுமோசங்களுண்டாகக் கூடும், அவைகளை விட்டும் பேணிக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது:— பாத்தினுடைய இல்மைக் குறித்துள்ள கித்தாபுகளில்

மஃகூறுகிய ஆரிபீன்களால் கோர்வை செய்யப்பட்ட கித்தாபுகளல்லாதவைகளை வாசிப்பதைவிட்டும் பேணிக்கொள்ளவேண்டும், ஏனெனில் பாத்திலுடைய இல்மிலும் ளாஹிறைப்போலவே பலபல பிரிவுகளிருக்கின்றன சிலருடைய விசுவாசம் பலாசிபாக்களுடைய விசுவாசம்போலும் சிலருடைய உறுதி இந்து ஞானிகளுடைய உறுதிககு நெருங்கியும், சிலருடைய நம்பிக்கை புத்தர்களுடைய நம்பிக்கைபோலும் பலவிதமாயிருக்கும் அந்தப் பலபிரிவுக்காரர்களும் கிததாபுகள் கோர்வைசெய்திருக்கிறார்கள், அந்தக் கித்தாபுகளிற் சிலது தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுமிருக்கின்றன. அவைகள் ஈமானைக்கொல்லும் நஞ்சாயிருக்கும், நான் இவ்விதமான சில கித்தாபுகளைப் பார்வையிட்டிருக்கிறேன். ஒரு மனிதன் மிகவும் பேணுதலாய் ஒருவருக்குங் காட்டாமல் ஒரு சிறு கித்தாபை வைத்திருந்தார், நான் அவரிடமதைக்கேட்டு வாசித்தபொழுது என் சரீரம் நடுங்கிவிட்டது, சியாக்களில் ஒரு தவறுதலான கூட்டமிருக்கின்றது, அந்தக்கூட்டத்தவர்களின் கித்தாபென்பது எனக்குத் தெரியவந்து அவரிடம் நான் சொல்ல, அவரிதை எங்கள் செய்கு என்னிடம் ஒருவருக்குங் காட்டவேண்டாமென்று தந்திருக்கிறாரென்று சொன்னார். இன்னம் சில கித்தாபுகளில் மஃகூறான ஆரிபீன்களுடைய பெயர்களை வைத்துப் பொய்யாக அவர்கள் சொன்னதாய் எழுதப்பட்டுமிருக்கின்றது. இன்னம் முகியித்தீனிபுனு அறபி றளியல்லாகு அன்கு முதலிய பெரியோர்களுடைய கித்தாபுகளில் சில பிழையான பேச்சுகளையும் தவறான சொற்களையும் சிலர் நுழைத்தெழுதப்பட்டுமிருக்கின்றது. ஆகையால் இப்படிப்பட்ட கித்தாபுகளை வாசிக்கும்பொழுது மிகவும் பேணுதலாயிருக்கவேண்டும், தனது செய்கு தெளிவையுடையவராயிருந்தால் அவரிடங்காட்டி உத்தரவுபெற்று வாசிப்பது புத்தியாயிருக்கும். இன்னம் ஆரிபீன்கள் ஆசிக்கீன்களாகியவர்கள் தவ்ஹீதுகளுடைய பேச்சுகளைச் சொல்லிய பைத்துகளை அல்லது முனாஜாத்துகளைப் பாடம் பண்ணிக்கொண்டு அந்தப் பெரியோர்களுடைய மக்காமில் சேர்ந்தவர்கள்போல் பேசிக்கொண்டு இதுதான் மஃரிபாவுடைய இல்மென்று நினைத்து மருண்டிருப்பதை விட்டும் பேணிக்கொள்ளவேண்டும்

நாலாவது, பற்பல தரீக்கிலுள்ளவர்களும் நமது தரீக்கு மேலானது உங்கள் தரீக்கு கீழானது, நமது சுலூக்குச் சரியானது உங்கள் சுலூக்குச் சரீயில்லாதென்று வீண்தறகங்களிற் றலையிடாமல் பேணிக்கொள்ளவேண்டும் தரீக்குகளுக்குரிய குத்புமார்கள் அவரவர்கள் சென்று ஜயமடைந்த ஒழுங்குகளைக் காட்டிக் கொடுப்பார்கள்

சிலர் இக்றை வாயால் மொழிவதிலு ம் கல்பால் செய்யும்படி ஏவுவார்கள், சிலர் இது தொடக்கத்துக்கு வருத்த மென்று வாயால்சத்தமிட்டுச் சொல்லு ம்படி சொல்வார்சள், சிலர் ஆடியுமி ராகமாய்ப் பாடியும் ஆசையில் மூழ்கி க் கல்பைத் தரிப்பிக்குதற்குக் கட்ட ளையிடுவார்கள் ஆனல் இவர்கள் நோ க்கமெல்லா மொன்ருயிருக்கும். கல் பை ஒரே எண்ணத்திற் றரிபடுத்துகிற தற்கே, ஒரு மனிதன் ஒரு காரியத் தை ஞாபகத்துக்கெடுத்துக் தெண்டி க்கும்பொழுது கண்ணை உயர்த்தி நி னைக்கத் தெண்டிப்பான், சிலர் நெற் றியில் விரல்களை வைத்தழுத்தி மன த்தைச் செலுத்தத் தெண்டிப்பாகள் சிலர் கீழே பார்வையைத் தரிபடுத்திக் கொண்டு எண்ணத்தெண்டிப்பார்கள், எவ்விதஞ்செய்தாலும்நோக்கமொன்றே ஆகையால் தரீக்குகளுடைய சுலூக்கு களை குறித்துத் தர்க்கமாடுவது வீணு யிருக்கும், இவைகளை விட்டும் பேணி க்கொள்ளவேண்டும்.

ஐந்தாவது, மஃரிபாவுடைய விஷய ங்களில் தர்க்கங்களாடுவதை விட்டொ ழியவேண்டும். அல்லாகுத்தாலாவின் மஃரிபா அல்லது அறிதலாவது அவ ரவர்களின் அக்கிலுடைய அளவுக்கும், அறிவுடைய அளவுக்குந் தக்கதாயிருக் கும், ஒரு மனிதனைச் சிலர் கேள்வியி ன்பேரில் அறிந்திருப்பார்கள், சிலர் க ண்டு அறிந்திருப்பார்கள், சிலர் கண்டு ம் பேசியும் அறிந்திருப்பார்கள், சில சினேகிதம்பண்ணி அறிந்திருப்பார்கள் சிலர் எவ்வேளையும் ஒன்ருயிருந்து கு ணங்களையும் நடக்கைகளையும் மறிந்தி ருப்பார்கள், இவர்களொவ்வொருவரும் தங்களுக்கு இடங் கிடைத்தமட்டில் அறிந்திருபபார்கள், உள்ளமையைப்பா ர்த்தால் அந்த மனிதனே தன்னைத் தனக்குத் தெரியாதவனு யிருப்பான், இதுபோலவே அல்லாகுத்தாலாவுடை ய மஃரிபாவுமாயிருக்கும். ஒரு சிறு பையன் அல்லாகுத்தாலா பெரியவன் யாவையும் படைத்தவன் தத்துவத் தையுடையவனென்று கேள்விப்பட்ட பொழுது அவனுடைய அக்கில் அவ ன் வானலோகத்தில் லிருக்கிற ஒரு பெரிய மனிதனைப்போல் சூறத்தாகும் அவன் பராயமாகி அறிவு அதிகப்பட அதிகப்பட அரூபி என்டின் கருத் து விளங்கும். ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய இல்முக்கும் அறிவு க்கும் தக்கவிதமான மஃரிபா அல்லது அல்லாவின் அறிவிருக்கும். சிலர் அ ல்லாகுத்தலாவுடைய சில சிபத்துக ளை மட்டும் வணங்கிவருகிருர்கள். மு ஷ்ரிக்கீன்க ளாகிறவர்கள் அல்லாகுத் தாலாவுடைய சில சிபத்துகளை மட் டும் தெய்வமென்று வணங்கிறவர்கள் இந்துக்கள் (காலிக்கு) படைத்தவ னென்பதற்கு பிரஹ்மா வென்றும் (ஹலிக்கு) அழிக்கிறவனென்பதற்குச்

சிபெனென்றும் ( றப்பு ) வளர்க்கிறவனென்பதற்கு ஸிவனென்றும், ஒவ்வொரு ஸிபத்துகளையும் ஒவவொரு தெய்வமென்று, வணங்கி வருகிறார்கள். இந்த ஸிபத்துகளெல்லா ஞ் சேர்ந்த உள்ளமைக்குறிய திரு நாமமாகிய அல்லாகுத்தாலாவை நாம் வணங்கிறோம்,

இன்னும் மார்க்கங்களின் வித்தியாசங்களுண்டாயிருப்பது, ஸில மார்க்கங்களில் அல்லாகுத்தாலாவை முழுதும் தன்ஸீஹாக்கி யும் ஸில மார்க்கங்கள் தஷ்பீஹாக்கியு மிருப்பதே. அல்லாகுத்தாலாவுக்குத் தன்ஸீஹுக்குறிய ஸிபத்துகளும், தஷ்பீஹுக்குறிய ஸிபத்துகளு மிருக்கின்றன, குறுவானில் தன்ஸீஹாகவும் தஷ்பீகாவும் பேசியிருக்கிறது, தன்ஸீஹாவது கல்புகளுக்கு மட்டுப்படுத்க்கூடாத ஸிபத்துகளாயிருக்கும். தஷ்பீகாவது அல்லாகுத்தாலாவுடைய ஸிபத்துகளை ஒப்பிட்டுச்சொல்லுதல், இந்த தன் ஸீகுடைய ஸிபத்துகளிலுள்ளது ( கிதம் ) பூர்ப்பமானவன் (பக்கா) நித்திய முடையவன் ( முகாலிபதுன் லில்ஹுவாதிது ) புதிதானவையாகிய கல்குகள் யாவுக்கும் வித்தியாசமானவன். ( கியாமுகூபின் பஹீ ) தன்னைக் கொண்டே தரிபாடானவன் ( வஹ்தானியத்து ) தனியனானவன், இந்த ஸிபத்துக்களெல்லாம் தன் ஸீகுக்குரியதாயிருக்கும், பூர்ப்பமானவனென்ற சொல்லின் பொருள் விளங்குமல்லாமல், அதின் கருத்து புத்திக்கு மட்டும்படாது, நம்முடைய அக்கிலுக்குச் சகலதுக்கு மொரு தொடக்க மிருக்கவேண்டும், தொடக்கமில்லை என்பதை நாமெவவளவு யோசித்தாலும் மட்டுப்படாது. நாம்மேலே சொல்லிய மற்ற ஸிபத்துகளெல்லா மிதுபோலேதான், அல்லாகுத்தாலா விருக்கிறான் அல்லது இருந்தானென்று சொன்னவுடனே அல்லாகுத்தாலாவிருக்க ஒரு தல மிருக்கவேண்டுமென்று நமது அக்கில் சொல்லும், தலமில்லாமல் எவ்வித மிருக்கக் கூடுமென்பது எங்கள் அக்கிலுக்கு சூறத்துப்படாது. தலமிருக்கின்றதென்றால் தலம் முந்தியோ அல்லா முந்தியோவென்று நினைபபதற்கிடமாகும். ஆகையால் அக்கில்களுக்கு மட்டுப்படாதவன், ஒப்புவமை சொல்லக்கூடா தவன், என்பதுதான் தன்ஸீகு. தஷ்பீஹாவது ஒப்புவமை சொல்லி விளங்கிக்கொள்ளல், அறிவையுடையவன், நாட்டமுடையவன், தத்துவமுடையவன், பார்வையுடையவன், கேள்வியுடையவன், பேச்சுடையவன் முதலிய ஸிபத்துகள் நமது புத்திக்கு மட்டுப்படுகின்றன. நமக்கு அறிவு புத்தி பார்வை கேள்வி பேச்சு முதலியவைகளெல்லா மிருப்பதால் அவைகள் தஷ்பீகுடைய ஸிபத்

துகளாயிருக்கும். ஆனல் நமது பார்
வை கண்ணைக்கொண்டும், கேள்வி கா
தைக்கொண்டு மாயிருக்கும். அல்லா
குத்தாலா கண் காது முதலியவைக
ளில்லாத அரூபியாயும், சகலருடைய
பார்வையும் கேள்வியும் அவனைக்கொ
ண்டு மாயுயிருப்தால் இந்த உவ
மைகளை விட்டுங் கடந்து கலப்பற்ற
தன்சீஹாகவும், காலம் தலமுதலியவை
களெல்லாம் விட்டும் துய்தாக்கியும் எ
வ்வேளையுமொரே தன்மையா யிருக்கி
ருனென்ற உறுதியாயும் திட்டப்படுத்
வென்றும். அல்லாகுத்தாலாவுடைய
மறுத்தப்பாக்களை ஆரிபீன்கள் பலதாய்ப்
பிரிந்துப் பேசுகிருர்கள், அவைகளி
ல் அஹதிய்யத்து, வஹ்தத்து, வாஹி
திய்யத்து ஆகிய மூன்றும் நாயகத் த
னக்குக் குரியது. ஆனல் அஹதிய்ய
த்துடையமறுத்தப்பாஅல்லாகுத்தாலாவு
டைய தாத்துடைய மறுத்தபாவயிருக்
கும், இந்த மறுததபாவில் அல்லாகுத்
தாலாவை அறியக்கூடாது, அவுலிப்பா
க்கள் நபிமார்கள் ஒருவருக்கும் அறிய
க்கூடாது. அல்லாகுத்தாலாவை யறி
கிறதும் சுகூதும்,வுகூலும்வஹுத்துடைய
மறுத்தபா மட்டுக்கே. ஆரிபீன்கள் மி
குதியெல்லாம் பேசுகிறது இந்த மரு
த்தபா மட்டுக்கே, சில தருணங்களில்
அஹதிய்யத்துடைய மறுத்தபாவைக்
குறித்தும் பேசுவார்கள், இந்த வித்தி
யாசத்தைக் கவனியாமல் சிலர் ஒருவ
ரோடொருவர் வதாடிக்கொள்வதைப்
பார்த்திருக்கிறேன், ஒருவர்பேச்சு மற்
றவர் பேச்சுக்கு மாற்றம்போலிருக்கும்
இந்த வித்தியாசத்தைக் கவனித்தால்
விரோதமாயிருக்காது, சில காலத்திற்
குமுன் முஸலிம் நேசன் பத்திரிகை
யில் இருபகுதியார் ஒருவரை யொரு
வர் மிகவும் வைராக்கியங் கொண்டு
காபிரென்றும் முஷ்ரிகென்றும் நிந்தி
த்துப் பேசி தற்கமாடியதை வாசித்
திருக்கிறேன், இருதிறத்தவர்களும் கு
றுவானைக்கொண்டும் ஆரிபீன்களுடை
ய பேச்சுகளைக்கொண்டும் அத்தாட்சி
கள் காட்டியிருப்பதையும் கண்டிருக்
கிறேன், இந்தத் தற்கத்துக்கெல்லாம்
காரணம் நான் காட்டிய வித்தியாசத்
தைக் கவனிக்காததுவே.

இன்னம் ஆரிபீன்களும் ஆஷிக்கீன்க
ளும் அவர்களெந்த மக்காம்களில் நிற்
பார்களோ அந்த மக்காமுக்குடைய
பேச்சுகளாய்ப்பேசுவார்கள், இவைகள்
ளாஹிறுக்குக் குற்றம்போ லிருக்கும்,
இதற்கு ஒரு உதாரணஞ் சொல்லுகி
றேன், சூபியாக்க்ள் சில மக்காம்களி
ல் (லாஅன இல்லாகூ) நானில்லை அவ
னேயன்றி என்று தன்னை பனுவாக்கி
அல்லாகுத்தாலாவைத் தரிபடுத்தி தி
க்று செய்வார்கள். இன்னு மொருமி
க்காமில் அவனில்லை நானே யல்லாம
லென்று சொல்வார்கள், இந்த திக்ரு
வது தன்னை பனுவாக்கியதின்பின் அ
ல்லாகுத்தாலாவின் அருளால் அவன்

பேச்சு இவன் நாவால் வெளியாகிறதாயிருககும், இன்னுமொரு மக்காமில் நானுமில்லை அவனுமில்லை யென்று திக்று செய்வார்கள், நானென்றும் நீயென்றும் பேசுவதெல்லாம் நான், நீ யென்று இரண்டாகி எண்ணமிருக்கும் வரையும், அந்த எண்ணம அற்றுப் போனபொழுது நான் என்றும் அவனென்றுஞ் சொல்லுதற்கு என்ன இடமிருக்கிறது, ஆனல் அந்தப்பேச்சுக்ள் அந்தந்த மக்காமைச் சேர்ந்து நிற்கும் பொழுது மொழிவதேயல்லாம அவாம்களாகிய நாம் அந்தப பேச்சுகளைப் பேசுவது குற்றமாயிருக்கும், முறுத்தத்துடைய உக்கும் விளையக்கூடும். ஐயம் பெற்ற முஹக்கிக்கீன்கள் பேசுகிறார்களென்று நாமும் அதுபோல் பேசக்கூடாது.

ஆறுவது நமது பேச்சுகளிலும் எண்ணங்களிலும் அநேக பிழைகளுண்டாயிருக்கின்றன, அவைகள் ளாஹிறுக்குப் பிழையல்லாதிருந்தாலும், அக்கீகத்திக்குப் பிழையாயிக்கும் பாத்தினுடைய இல்மு கற்றுக்கொள்ளும்பொழுது இப்படிப்பட்ட பிழைகளைவிட்டும் பேணிக்கொள்ளவேண்டும், இதைக்குறித்து முன்னுமொருமுறை பேசியிருக்கிறேன் நாமபேசும்பொழுது ஊரென்று ஒருவஸ்திருப்பதுபோலும், வீடென்று ஒருவஸ்திருப்பதுபோலும் சரீரமென்று ஒருவஸ்திருப்பதுபோலும் பூமியென்று ஒருவஸ்திருப்பதுபோலும் பேசுகிறோம், மந்திக்குடைய இல்மு கற்றவர்களாயிருந்தால் இந்தப் பேச்சுகளெல்லாம் பொர்துப்பேச்சு அல்லது தொகுதிப்பெயரல்லாது உள்ளமையில் அப்படி ஒருவஸ்தில்லை என்பதை யறிவார்கள் ஆனல் மிகுதியானவர்கள் இந்த இல்மைக் கற்றில்லாத வர்களானதால் இதை விவரித்துக் காட்டுவது அவசியமாயிருக்கின்றது. ஊரென்று ஒரு பொருளில்லை பூமியில் சில பகுதியிலத்தில் வீடுக்ளும் தெருக்களும் மனிதர்களும் மனிதர்களுக்குத் தேவையான பொருள்களுமுண்டாயிருக்கும் பொழுது அதற்கு ஊரென்று சொல்லப்படும், வீடென்பதும் இதுபோலவே, கல்லு மண் சுண்ணம்பு முதலிய வைகளைச் சேர்த்து ஒரு ஒருழுங்காய்க் கட்டி இருக்கும் தருணத்தில் அதற்கு வீடென்றும் அவைகள் வெவவேறுயிருக்கும்பொழுது வெவ்வேறுண பெயர்களும்கொடுக்கப்படும். ஆகையால் வீடென்பதும் ஒரு தொகுதிப்பெயரல்லாது அப்படி ஒரு பொருளில்லை சரீரமென்றும் ஒரு பொருளில்லை, இரத்தம் சதை முள்ளும் முதலியவைகள் சேர்ந்து பற்பல உறுப்புகளாகச் கலந்து அவைகளெல்லாம் ஒரு உருவமாய்த்தோற்றும் அந்த உருவற்றுக்குச் சரீரமென்று சொல்லப்படும். உள்ளவைப்படிக்குச் சரீரமென்பதும் ஒரு தொகுதிப்பெயர் பூமியென்பதும் இது

போலவே ஒரு பொதுப்பெயராயிருக்கும் கடலுங்கரையும் அவைகளிலுள்ள சகல பொருள்களுக்கும் பூமியென்று சொல்லப்படும். பூமியிலுள்ள பொருள்யாவும் சாஸ்திரப்படிக்கு எங்கள் கண்ணுக்குப் பலடல ரூயமாயிருந்தாலும் சில ஆவிகளால் சமைந்திருக்கின்றன அந்த ஒவவொரு ஆவியையும் பரிசோதித்து வரும்பொழுது வேறுசில ஆவிகளைக்கொண்டு சமைத்திருக்கின்றது ஆகிலும் சாத்திரத்திற்கு இவைகளுக்கெல்லாம் சில இன்னதென்று மட்டுப்படவில்லை ரூபியாக்களே யாவும் மண் தண்ணீர் காற்று நெருப்பு ஆகிய நாலு பூதங்களைக் கொண்டுண்டாயிருபதாய்ச் சொல்லுகிறார்கள், கல் மண் தண்ணீரில் நின்றும் தண்ணீர் காற்றில் நின்றும் காற்று நெருப்பில் நின்றும் நெருப்பு ஒளிவில் நின்றும் ஒளிவு சிர்ரில் நின்றும் வெளியானதாய்ச் சொல்லுகிறார்கள். கல்விமான்களுடையய கருத்துப்படிக்கும் ரூபியாக்களுடைய கருத்துப்படிக்கும் தோற்றப்படுகிற வைகளெல்லாம் கண்ணுக்குத்தோற்றும் தோற்றமல்லாது உள்ளமையல்லாத வைகளாயிருக்கும். கல்விமான்பளுடைய ஆராயவுக்கு விளங்கியடட்டுக்கு மிகவும் நுட்பமான கண்ணுக்கு அல்லது வேறு இந்திரியங்களுக்குத் தோற்றாத ஆவியாயிருக்கும். ஆரிபீன்களுடைய சொற்படிக்கு, சிரஞ்மிருக்கும், இந்த சிருக்கு அல்லாகுத்லாலாவுடைய ரூதென்றும் சொல்லப்படும். ஆகையால் ஆலம் அஜஸாமில் தோற்றப்படுகிறபொருள்கள்யாவும் நோட்டமிட்டுப் பார்க்குபொழுது அவைகளெல்லாம் தோற்றமென்றும் அந்தத் தோற்றத்துக்குப் பலபெயர்களைக் கொடுஇருக்கின்றதென்றும் விளங்கும், இதை எவவேளையும் நோட்டமிடுதற்கு முஷாக்கிபாவென்று சொல்லப்படும். இப்படி நோட்டமிட்டு கண்ணுக்குத் தெரியப்பட்டவைகள் சகலதும் தோற்றமேயல்லாது உள்ளமையல்லவென்று திட்டப்படுத்துதற்கு பனாவாகுதவென்று சொல்லப்படும். இவ்விதம் திட்டப்படுத்தும்வரையுமுள்ள நிலைபரம் தோற்றத்தைக்கொண்டும் பேச்சைக்கொண்டும் மருண்டு மயங்கி இருக்கிறதாயிருக்கும் இந்த நிலைபரத்திற்குத்தான் நபிசல்லாகு அலைகிவஸல்லம் மனிதர்கள் உறங்குகிறார்கள் மவுததானால் விழிப்பார்களென்று சொல்லியிருபபது செய்குமார்களாகிறவர்கள் இந்தவிதமான உறக்கத்திலிருப்பவர்களைத் தட்டி எழுப்பி உள்ளமையைக்காட்டிக் கொடுப்பவர்களாயிருக்கும்.

பாத்திஹுடைய இல்முக்கு அடித்தாளம் இரண்டு காரியங்கள். முதலாவது அல்லாகுத்தாலாவல்லாமல் வேறொன்றுமில்லை யென்பதை சக்கு சந்தேகமில்லாமல் திட்டப்படுத்துதல் இரண்டாவது எங்கள் கண்ணுக்குத் தெரிகின்ற வைகள்முழுவதும் தோற்றமேயல்லாது உள்ளமையில் இல்லையென்று திட்டப்படுத்துதல், இது மனவருத்தமான காரியங்கள் ஏனனல் பூமியும் பூமியிலுள்ள சகல பொருள்களு

ம் வானம் சந்திரன் சூரியன் முதலிய சகல வஸ்துக்களும் அர்சு குருசு நாகம் சோரகம் சகலதும் மலாயிக்கததுகள் முதல் படைப்புகள்யாவும் உள்ளமைப்படிக்கு இல்லையென்றும் அவைகளெல்லாம் கியால் அல்லது மனிதன் எண்ணிக்கொண்டிருக்கிற எண்ணமேயல்லாது உள்ளமையில்லையென்றும்திட்டப்படுத்தவேண்டும். சிறுபாரயமுதல் நான் இருக்கிறேன் நான் நடக்கிறேனென்று நிலைத்திருப்பதெல்லாம் நமது கியாலென்கிற மயக்கமென்று நமக்கு உறுதிப்படவேண்டும், ஆரிபீனகள் சொல்லியிருக்கிறார்கள் ஞானிகள் பாடியிருக்கிறார்களென்று அவைகளைப் பாடமிட்டு கொண்டிருப்பதலல நமக்கு உறுதியாய்ப் திட்டப்படுத்தவேண்டும் இது இல்மைக்கொண்டும் கஷைபக்கொண்டும் அறிந்து திட்டமாகவேண்டும். இன்னம் கண்ணுக்குத் தெரிகின்றவைகளெல்லாம்உள்ளமைப்படிக்கு இல்லையென்றும் ஒருவர் கண்ணுக்கு தெரியாதவனுகவும் அக்கிலைக்கோண்டு மட்டுப்படுத்தகூடாதவனுகவும் மிருக்கிற அல்லாகுத்தாலா ஒருவனேயல்லாது வேறொன்றுமில்லை என்பது சந்தேகமில்லாது உறுதியாகவேண்டும். காண்பதெல்லாம் பொய்யென்றும் காணுதது மெய்யென்றுமாகவேண்டும். இன்னம் துன்யாவில் பற்பல வேதங்களை அநுசரிக்கிறவர்களிருக்கிறார்கள் அவர்களும் அல்லாகுத்தாலாவென்றும் நாமதஐைப்பாவிக்காது போனுலும் ஆண்டவனொருவனிருக்கிறானென்று விசுவாசங்கொண்டிருப்பார்கள் ஆனுல் அவர்கள் அல்லாகுத்தாலாவுக்குக் கொடுக்கிற சிபத்துகளுக்கும் நாம்கொடுக்கும் சிபத்துகளுக்கும் வித்தியாசங்களிருக்கின்றன நமது மார்க்கப்படிக்கு அல்லாகுத்தாலாவுக்குவுடைய சிபத்துகளெல்லாஞ் சேர்நதவனுயுறுதிகொள்ளவேண்டும் இந்த காரியங்கள் மனத்திற்குத்தெளிவாகும்பொருட்டு சில அத்தாட்சிகளைக் காட்டப்போகிறேன், நான் இப்பொழுதுசொல்லப்போகிற பேச்சுகள் ஆழமானபேச்சுகளாயிருப்பதால் தாங்கள் மிகவும் கவனமாய்க் கேட்டு ஆராயவேண்டும். நான் முதலாவது நமது கண்ணுக்குத்தெரிகின்ற யாவும் கியாலென்பதை சாஸதிரமுறையாக அததாட்சிப்படுததுப்போகிறேன், இரண்டாவது காண்பதெல்லாம் ஒரே பொருளென்பதையும் அந்தப்பொருளுக்கு நமது மார்க்கப்படிக்குச் சொல்யிருக்கின்ற சிபத்துக்ளெல்லாமிருக்கின்றன வென்பதையும் இந்தசமானில் கல்வியிற் தேர்ச்சியடைந்திருக்கிற கல்விமான்களேற்றுக்கொண்டிருக்கிறசாஸ்திரத்தைக்கொண்டுமெய்ப்படுத்ப் போகிறேன். நமது இமாம்கள் கித்தாபுகளில் அல்லாகுத்தாலா ஒருவனிருக்கிறனென்று காட்டியிருக்கிற அத்தாட்டிசிகளை புத்துசமஸ்தவர்களேற்றுச் கொள்ளாமல் அவைகளுக்கு மறுமொழிசொல்லுவதால் புத்துமதஸதவாகள் மனமொபபுக்கொள்ளும்படிக்கு சாஸதிரபடிக்கு அத்தாட்சிகள் காட்டி நமது ஆரிபீன்களுடைய சேபசகளையும் நமது நாயகம் நடசல்லல்லாகு அலைகிவஸல்லம் அவர்களுடைய போதனைகளையும் உண்மையென்று காட்டப்போகிறேன் அல்லாகுத்தாலா உதவிசெய்வாராக,

---0---

ஞானதீபம் முதற்பாகம்

முற்றிற்று.

---0---